Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

10

# பக்தி இலக்கியம்

**ஆ.சங்கரலிங்கம்**
தேவார இசைமணி, திருமுறைக்கலாநிதி, தேவாரத் தமிழிசைத் தென்றல், சம்பந்தர் தமிழ்நெறிச் செல்வார் பண்ணிசை மாமணி
ஓதுவார் : திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை தேவார ஆசிரியர், மாவட்ட அரசு இசைப்பள்ளி,பெரம்பலூர்

**ஆய்வு நோக்கம்:-**

**பக்த**ி என்பது அனைவருக்கும் கிடைக்குமா என்ற கேள்வி எப்போதும் நம்முள் உண்டு**. ஏ**ன் என்றால் பக்திப் பண்ணி பாடி பரவி இறைவனை வழிபட நமக்கு நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்**. அத**ன் அடிப்படையில் **பக்தி** இலக்கியம் எப்படி இசையை ஆதாரமாக கொண்டு விளங்குகிறது என்று இந்த கட்டுரை விவரிக்கிறது**.**

**கடவுச் சொற்கள்**

| | | | |
|---|---|---|---|
| **1.** | **தாளம்** | - | **திருவடிச் சிலம்பொலி** |
| **2.** | **ஜதி** | - | **நடை, கெதி, சொற்கட்டு** |
| **3.** | **பண்** | - | **சொல், அளவு, இசை** |
| **4.** | **மரபு** | - | **தோன்றிய கால நடைமுறை** |
| **5.** | **ஒற்று** | - | **எழுத்து, சொல், ஓசை, அளவு** |

## முன்னுரை

விண்ணையும் மண்ணையும் இணைக்கும் மெய்ஞானக் கலைகளின் கேந்திரம், பஞ்ச சபை, சப்தவிடங்கத் தலங்கள் என இதன் அசைவும், இசைவும் தரணியின் தவமே.

சிறப்பாகத் தஞ்சையின் தமிழிசையாகிய அருள்மொழி, அதன் தணிய ஒலிப் பண்புகள் சமுதாய நலன்களை பாதுகாத்துத் தரும் பக்திப் பண்ணை ஆகும்.

தமிழிசையின் இனிய ஒலிபுகலும் முதன்மைசால் நலம் காத்து பராமரிக்கும் சேவையில் தொகுத்தும், வரித்தும் முனிவர்கள், ஞானியர்கள், தபசிகள், மன்னர்கள், புலவர்கள், மதஸ்தாபன தலைவர்கள், அடியார்கள் பொறுப்புடன் ஆற்றிய சேவை காலத்துக்கு காலம் நிகழ்ந்து கற்கவும், நிற்கவும், திரிகரண ஊக்கம் தரும் தெய்வீக ஊற்றாகி உள்ளது. ஆயினும் மாறி வரும்

காலச் சூழ்நிலை காரணமாக, அழியும் நிலையில் உள்ள பண் இசையினைப் போற்றிப் பாதுகாத்து பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்த சிந்தனையே இக்கட்டுரை.

**பொருளுரை**

உயிர்கள் மனிதப் பரிமாணம் பெற்ற நிலையில், இயற்கைச்சூழல் காரணமாக தனக்கு அப்பாற்பட்ட சக்தியை உணர்ந்து, அதனைத் தனது வாழ்வியலுக்கு சாதகமாக்கிக் கொள்ள வேண்டிய அவசியத்தில் அஞ்சியாகிலும், அன்புபட்டாகிலும் கைக்கொண்டது.

பக்தி அணுகுமுறையில் ஒலி, ஒளிக் கூறுகள் நெருக்கமாக அமைந்தது. இதன் பரிணாம வளர்ச்சி அறிஞர்கள் கருத்துப்படி கி.பி மூன்றாம் நூற்றாண்டில் தனி மனித முயற்சியாக உருக்கொண்டு தமிழின் கவிதை தோத்திர சாதனமாக காரைக்கால் அம்மையார் வாழ்வின் கடவுள்நிலை அநுபவ நுகர்ச்சி ஆகியது.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே தமிழ் தோன்றி வளர்ச்சி பெற்று, இலக்கிய வளர்ச்சியில் இருந்து தோத்தர உருவம் எடுத்து தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன்பட்டினத்துக்கு எல்லையில் கணவனால் வணங்கிடப் பெற்ற காரணமாக கற்புநெறி முதிர்ந்து இறைனைத் தஞ்சம் அடைகின்ற தருணம், இறையருளை வியந்தும் நயந்தும் கனிந்தும், ஆன்மீக வெளிப்பாடாகி உருக்கொண்டதுதான் தோத்திரக் கவிதை.

இவரைப் பாட்டரசி, இசைக்கி, தாளத்தி, பிச்சி, தாயம்மா, நாட்டாராச்சி என பக்தியுடன் பாசமிகு வாரிசுகளுக்கு பெயர்களை இட்டு இன்றும் வழக்கில் வாழ்வியலில் கலந்து போற்றிப் பக்திமையைப் போற்றி வருகின்றனர் நம் தமிழ் மக்கள். இவர் அருளிய தோத்திரப் பாடல்களில் கோயில் மூத்த திருப்பதிகம், பக்தியில் முத்தமிழ்ச் செறிவுடன் பண் இசைக்கு முன்மாதிரியாகி, இன்றுவரை இசைக்கும் இறைமுறைமைக்கு நாட்டையே தோத்திர சாதனமாகிட இயக்கம் கண்ட திருநிலை நாயகி உண்ணடிசில் என ஊட்ட உண்டு மகிழ்ந்த திருஞானசம்பந்தப்பிள்ளையார் அருளிய தோடுடைய செவியன், செவியென இருபால் ஒருமையாக நுகர்வின் ஒலிக்குரிய தானத்தை ஓமெனத் துவக்கும் ஆதாரத்தொனியே, அருள் செறிவே கணபதியானது. ஓமான் என முதற்கடவுள் நிலையான உருவமாகியும் மங்கள வாத்தியத்திலும் இடம் பெற்று மற்புரிபுயத்தினிது மேவும் நேரத்திலும் அது உச்சமாக, திப்பமுறு பக்தி மன ஒருமைப் பரிமாணமாகி, விரல் நுனியிலும் கூட நின்று நடமாடும் மல்லாரியாகி, நாதாந்தம் பரிமளிக்கும் வழியில் பக்தியை, இறைநிலையைக் கண்டு காட்டும் கவின்கலை ஞானக்கருவூலம் ஆகியது.

||துத்தம் || கைக்கிளை || விளரி || தாரம்

||உழையிளி || ஓசை || பண் || கெழுமப் || பாடி

||சச்சரி || கொக்கரை || தக்கை || யொடு || தகுணிதம்

||துந்துபி || தாளம் || வீணை || மத்தளம் || கரடிகை
||வன்கை ||மென்தோல் ||தமருகம் ||குடமுழா ||மொந்தை

என மிடறு, கஞ்சம், நரம்பு, தோல, துளை என்று இன்னிசை சம்மேளனத்தை தாளத்ரயம் எனும் தகிட முத்தமிழமுதினை மூன்று மாத்திரை காலச் சொற்கட்டாக தொடுக்கும் தோத்திரப் பாமாலையே பண்ணிசையின் திறங்காட்டும். குறித்துள்ள கோடுகள் ஒன்றரை, மூன்று என அலகு பெற்ற அடையாளமான ஒற்றிசை (ஓசை) நீடலும் உண்டுதானே "கண்டறியாதன கண்டேன்" – ஒற்றிசை நீடல் சந்தம்.

**சந்தம்**

"வெந்தழல் நீறாமால் வெள்ளெலும்பு பெண்ணாமால்
வந்தமத வேழம் வணங்குமால் – சந்தமெழப்
பாடுவார் உள்ளுருகப் பாடும் பண்ணிசைக்கு
நீடுலகில் உண்டோ நிகர்".

சந்தம் தமிழின் சிறப்புரிமை தோத்திரங்களில் இதற்கு எடுத்துக்காட்டுகள் நிறையவே உள்ளன. இதனை ஓதிவந்த வாய்மையால் உணர்ந்துரைக்கலாகும். மேலும்,

"சந்தமார் தமிழ்ஞான சம்பந்தன்"
"சந்தமொடு நீடு பாடிப்பாடி"

போன்ற தொடர்களால் அறியலாம். இனிச் சந்தமென்பது இறைவனது திருப்பாதத்து சிலம்புகளின் ஒலி என்பதை,

"சீரார் திருவடித் திண்சிலம்பு"
"சிலம்பொலிக்கே கொட்டு கரம் தட்டும்"
"ஒலி இட்டவகை நந்திக்கு நட்டமிட்ட சிவன்"
"சதி பிழையாமை ஆடிய நடம்"
"உறு தாளத்தொலி பலவும்"
"பாடலிலயம் கூடக் கண்டேன்"
"நடையார் இன்சொல்"
"நடையார் பனுவல்"
"பாதச் சிலம்பு பலவிசை பாட"

எனவரும் தொடர்கள் விளக்குகின்றன.

**தாளம்**

சந்தத் தமிழ் சொற்கவி பாட நிதானம் நல்கப் பற்றிய தாளம், குரல் ஒலியை சொல்லாக வைத்து அது சிதையாதவாறு காக்கிறது, சந்தம் வைத்து

அதன் கலைநலம் ஓசை வளம், பொருள் செறிவுக்கு ஓசையை அதன் அளவை மெட்டாக இயக்கும் பண்பு பாட்டின் (கவிதையின்) அருள் வளரும் அமைப்பு, பண்காட்டும் இசை, பண்ணுண்டபாடல் சொல்பதம் மிக மிளிரச் சுவைதர இசையின் இணக்கம் உற முறையான பயிற்சிக்களமாவது சுத்தாங்கம், பண்ணாங்கம்,

மேற்கண்ட அத்தனையும் இடம்பெறக் குழு முறையில் கஞ்சக் கருவி (கல்லலகு பாணி) தொன்றுதொட்டு கற்காலத்திலும் இறைவனது கையில் தாளம் மிகுந்தவாறு வீசுதல், மடக்குதல், சுற்றுதல் அற்றதாய் சொல்லடுக்கு தரும் எழுத்தமைதியின் தனித்திறம் சிறக்க ஒற்றும் (தட்டும்) ஓசையே ஸ்ருதி, லயம், பண்ணிசைப் பரிமாணம், பக்தி இசை, பண்ணால் நீடி அறிவரு கொண்டு கூட்டிப் பாடும் பாட்டின் பொருள் வளம் காட்டும் முறைதான் பற்றிக் கயிறறுக்கில்லா இணைப்பு. உச்சுவாச, நிச்சுவாச, கம்பித கணிப்புக்கான மந்திர ஓசையே பதியும், பதிக அமைப்பிலான பண்ணின் பயனாம், இன்னிசையுமாகும்.

இப்பண்ணிசை நிகழ்வில் முதல்நடை, வாரம், கூடை, திரள் என்னும் நான்கு விசை இயக்கம் இருந்ததை தற்காலம் விளம்பம், மத்யம், துரிதம் என்கின்றனர். இதில் விட்டுப்போன முதல் நடைதனை “பண்ணு தலைப்பயனார் பாடலும், நீடுதலும் எனக் குறிப்பிடும் வழியில் திருத்தாளஜதி” என்ற பதிகம், ஒரு வரியிலேயே நான்கு இயக்கம் தந்து மரபுமுறைப் பயிற்சியாகியுள்ளது.

1) பந்தத்தால் வந்தப்பால்
2) பயின்று நின்ற உம்பரர்
3) பாலே சேர்வார் ஏனோர்கான்
4) பயில்கண முனிவர்களும்

எனப்பகரும் அடுக்கு விசைதனை அறியலாம். முதல்நடை என்பது நான்கு மாத்திரை அளவிலும், வாரம் என்பது இரண்டு மாத்திரை அளவிலும் கூடை என்பது ஒரு மாத்திரை அளவிலும், திரள் அரைமாத்திரை நிலையிலும் அடங்கும்படியான பாடலின் நிகழ்வாய் வருவது தமிழிசை. தாளத்தின் கணிப்புக்குள் மற்ற இசை நிகழ்வாகும் இசையே மெட்டு.

இன்னும் தமிழிசை, பொழுது, இடம், செயல், பண்பு, சூழல் உணர்வுகளின் வெளிப்பாடுகளாக அமைகின்றது. மேலும் மக்களின் நலன் சார்ந்த நடைமுறைக்கு சுகாதாரம், நற்சிந்தனை, சமுதாய சமன்பாடு, நம்பிக்கை, உழைப்பு, நேர்மை போன்ற வாழ்வியல் பண்புகளை பக்தி வழியாக வலியுறுத்தும் கோட்பாட்டைக் கொண்டது தமிழிசை.

தமிழின் முதன்மையான நூல் திருமுறை என்று சொல்வதுடன் “அன்பே சிவம்”, “ஒன்றே குலம், ஒருவனே தேவன்” இன்னோரன்ன இன்றுவரை நின்று

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

நிலவும் உயர்கோட்பாடுகளைத் தரணிக்குத் தந்துள்ளது. வேதகாலம், இதிகாச காலம் தொட்டு வளர்ந்து வரும் இது வரலாற்றில் சோழர், பாண்டியர் காலத்தில் பெரும் போற்றலுக்கும், வணக்கத்துக்கும் உரிய தெய்வீகத் தமிழாய், கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து, பண்ணுறத் தோய்ந்து ஆய்ந்த ஆலவாயுடையாரையும் தம் குழுவில் கொண்டது. அகத்தியர் போன்றோரால் அகத்தியர் தேவாரத்திரட்டு, ஸ்ரீஉமாபதி சிவாச்சாரியார் அருள்முறைத் திரட்டு எனவும் தொகுக்கப்பெற்றது. வாழ்வியலில் சிவஞானபோதம் முதல் மாபாடியம் வரை உலகம் போற்றும் ஞான மரபைக் கொண்டு, கயிலாய பரம்பரை என்னும் அரசியலைக் கடந்த ஆன்மீகத் தலைமை பெற்று எப்பொருட்கும் தானேயாய், யாவைக்கும் வீடலால் அவாயலாய், விண் நிமிர்ந்த கீர்த்தியதாய் தன் பண்பின் நிகர் அற்ற தலைமையால் பாதுகாப்பும், பராமரிப்பும் பெற்று செப்பேடும், கல்வெட்டுமாகி பல்கோடி பொருள்வளம் கண்டது.

**முடிவுரை:-**

இன்று தோராயமாய் முந்நூறு பேர்களால் மட்டுமே வாழ்வியல் தொழிலாகியும், அவர்களில் மரபுழி நில்லா நிலையுமாய் மறையும் சூழல். ஒற்றுக்குள் வரும் சொற்கட்டும் உணர்வைத் தரும். பண்மெட்டுமாக உயிரை வளர்க்கும் பண்ணிசை. ஓங்கு திருப்பதிகப் பண்ணிசை, செந்தமிழிசை, தமிழ் மரபு பாரெங்கும் பரவுதல் வேண்டும்.

தமிழ்கூறும் உலகின் முதலிசை தமிழிசையே வாழ்வியலின் வழித்துணையாகவும், வாழ் முதலாகவும் திகழ்வது தெய்வீக இசைத் தமிழே. சான்றுகள் சில.

1) || தோ ||டுடை |ய || செவி |

தனிகோடும் இணைக்கோடும் தாளத்தின் ஓசைக்குள் சொல்லும் சுருதி மந்திர கீதமாகிறது. இதன் வசமாகிய தோடுடைய சாமி (தோ.பா.சாமி மடம்) எனும் ஞானி ஓர் இராணுவ வீரராய்த் திகழ்ந்தவர்.

2) |கூற் |றா |யின |வா |றுவி |லக் |ககி |லீர்

திருவதிகை சராசரி அன்பர் சிவஞான சுவாமியாகி திருநாவுக்கரசர் ஐம்பொன் சிலை செய்து வைத்துள்ளார்.

3) |பித்|தா ||பிறை |சூ |டீ ||பெரு|மா|னே||அரு|ளா|ளா|

எனும் பாடல் ஒன்பதாம் நூற்றாண்டின் நிகழ்வை கடலூர் ஆவணக் காப்பகத்தில் பதிவாகியுள்ளதை ஒரன்பர் திருவெண்ணெய்நல்லூரில் அம்மன் கோயில் முகப்புச் சுவரில் வாசகம் மாறாமல் எழுதி வைத்திருந்தார்.

இன்னும் சொல்வதானால் திருவாவடுதுறை ஆதீனப் பண் மரபை கண்டு கேட்டு நுகர்ந்த அன்பர் தஞ்சை சரஸ்வதி மகால் ஏட்டுப் பிரிவில் பணியாற்றி

ஓய்வு பெற்ற ஐயா, கீழவாசல் தேவாரப் பாடசாலை சொக்கலிங்கம்- சென்ற சில வருட காலத்தில் ஆதீனப் பதிப்பாக வந்த ஒப்பிலா முலையம்மை பிள்ளைத் தமிழ் தாலப் பருவச் செய்யுளில்,

“மூவர் மொழிந்த திருமுறைப்பண்
முறையில் கரத்தால் ஒற்றறுத்து
முதிரும் தமிழ் வல்லவர் ஓத
முற்றிடு செவியால் தாம்பருகி
பூவைகளும் அஞ்சிறைச் சுகமும்
புதல் வண்டினமும் சுதிகூட்ட”

எனவும், திருவெண்காட்டு தேவாரத்தில்

“பண்மொழியால் அவன்நாமம் பல ஓதப் பசுங்கிள்ளை
வெண்முகில் சேர் கரும்பனைமேல் வீற்றிருக்கும்”

என்பதை நிறுவி வியந்துள்ளார்.

இன்றும் இதற்குரிய தடயங்கள் திருப்புறம்பயம், பெருவிரையாக்கலி மடம் (யாழ்ப்பாணம் சுவாமி மடம்), இடையாறு திருக்கோயிலில் பெருவிரையாக்கலி மறைஞானர், நால்வருடன் திருத்தாள சகிதராய் இருக்கின்றார். இவர் சமாதி சிதம்பரம் திருக்களாஞ்சேரியில் மடத்துடன் உள்ளது. இங்கேயே பிரமபுரீசர் கோயிலில் (சிங்காரத் தோப்பு) பத்மாவதி சிங்கியார் (வல்லி) திருவுருவம் உள்ளது.

இன்னோரன்ன செய்திகளை மனதுள் கொண்டு இசைப் பாட்டின் ஆதாரமாக விளங்கும் தேனூறும் தேவாரப் பாடல்களைப பண்ணிசையோடு பாடி பக்தி இலக்கியத்தை மேலும் மிளிரச் செய்வோமாக!!

**ஆதார பயிற்சி**

* தருமபுரம் ஆதீன தேவார பாடசாலை பயிற்சி
* திருவாவடுதுறை ஆதீன குழு ஓதுவார் பணி-
* ஆசிரியர்

திரு.ஆர்.வேலாயுத ஓதுவார்
தருமபுரம் திரு.ப.சுவாமிநாதன்
செங்கோல் திரு.அ.மாணிக்க ஓதுவார்
(குருகுல வாசம்) ’(1951-2005)

**தகவல் தந்த நூல்கள்**

1) திருமுறைகண்டபுராணம் – ஸ்ரீஉமாபதி சிவாச்சாரியார்
2) தாள சமுத்திரம் (2ம் பாகம்)-சேறை அறிவனார்
3) யாழ்நூல் – விபுலானந்த அடிகள்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

4) திருமுறைப் பெருமை – க.வெள்ளைவாரணனார்
5) பண்கட்டளை – அ.நடேச தேசிகர்.